# கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

## அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 28-02-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-02-28 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-03-01 | 2023-03-02 | 2023-03-03 | 2023-03-04 | 2023-03-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 23.0 | 23.0 | 24.0 | 24.0 | 24.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 40 | 30 | 20 | 20 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4.0 | 6.0 | 4.0 | 10.0 | 6.0 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 20 | 90 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 0 | 0 | 3 | 3 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை நிலவ வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 34.0°C - 35.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 23.0°C - 24.0°C. வேறுபாட்டிலும் இருக்கும். இந்த வாரஇறுதியில் மூன்று நாட்களுக்கு பொதுவான மேகமூட்டத்துடன் காணப்படும். காற்றின் வேகம் மணிக்கு 04 - 10 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

### பொது ஆலோசனை:

தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் விவசாயிகள் பயிர்க்கழிவுகளை பயிருக்கு இடையில் பரப்பி மண்ணின் ஈரப்பதத்தை தக்க வைத்துக் கொள்ளவும்.

### குறுஞ்செய்தி :

பயறு வகைகள், காய்கறிப் பயிர்கள் மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகள் தென்படும் இதனை கட்டுப்படுத்த 5% வேப்பங்கொட்டை கரைசல் தெளிக்கலாம்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| உளுந்து | உளுந்து சாகுபடி செய்யத்து உள்ள விவசாயிகள் பூக்கும் பருவம் 35 நாள் வயது உடைய உளுந்து பயிருக்கு இலைவழி தெளிப்பாக TNAU பயறு ஒன்டரை ஏக்கருக்கு 2 கிலோ விகிதம் பூ பூக்கத்தொடங்கும் பருவத்தில் அளிப்பதன் மூலம் பூ உதிர்தலை குறைந்து, அதிக மகசூல் மற்றும் வறட்சியை தாங்கி வளரும் . |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பப்பாளி | தேவைக்கு எற்ப நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். முதிர்ந்த பழங்களை அறுவடை செய்யும்போது மரத்தின் தண்டுப்பகுதியை சேதப்படுத்தாமல் கவனமாக அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த பிறகு, காய்ந்த கிளைகளை அகற்றி விடவும் சரியான ஒரு லிட்டருக்கு 3 கிராம் காப்பர்ஆக்ஸிகுளோரைடு அறுவடை செய்த தண்டு பகுதியில் தெளிக்கவும். |
| தர்பூசணி | அசுவினியின் தாக்கத்தை கண்டறிய மஞ்சள் ஒட்டும் பொறிகளை நிறுவவும். இலைபேன் பாதிப்பு அதிகமாக இருந்தால், ஃபிப்ரோனில் 5 எஸ்சி 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது ஸ்பைனோசாட் 45 எஸ்சி 0.35 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு தெளிக்கவும். காய் துளைப்பான்களின் தாக்குதல் இருக்கும் போது நோவலுரான் 10 இசி 1 மிலி அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 எஸ்சி 0.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு தெளிக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பகல் நேரங்களில் மாடுகளை கொசுக்கள் தாக்காமல் இருக்க 1 மடல் சோற்று கற்றாழை 10 ஓமம் இலைகளை ஒன்றாகக் கலந்து அரைத்து நீர் கரைசலாக்கி மாடுகளின் மேல் தடவலாம் மாடுகள் தனது வால் மூலம் கொசுக்களை விரட்ட முடியாத பகுதிகளில் மட்டும் இதைத் தடவினால் போதும் மேற்சொன்ன அளவு 3 மாடுகளுக்குத் தடவுதற்குப் போதுமானது சோற்றுக்கற்றாழை வாசனை இருந்தால் மாடுகள் மீது கொசு, ஈக்கள் மெய்க்காது இதை ஆடுகளுக்குத் தடவக் கூடாது. குளிர்ச்சி தாங்காது. சாரல், பனி குளிர்ச்சி இவற்றால் கால்நடைகளுக்கு சளி, காய்ச்சல் (உள்ளிட்ட பல்வேறு தொந்தரவு கள் ஏற்படாமல் தடுக்க கொட்டகையை சுற்றிலும் தார்ப்பாய்கள் அல்லது படுதா அமைத்து கதகதப்பான சூழலை உருவாக்கவேண்டும். |